Immigratie- en Naturalisatiedienst
*Ministerie van Justitie en Veiligheid*

# ஒரு புfypl தற்காலிக வதிவிட உரிமை: உங்களுக்கு அதன் அர்த்தம் என்ன?

உங்களுக்கு தற்காலிக வதிவிட உரிமை தரப்பட்டுள்ளது. உங்களுக்கு குடிவரவு, குடியுரிமை அமைச்சரவை (IND) இனால் தரப்பட்ட பத்திரத்தில் இது குறிக்கப்பட்டுள்ளது. இந்த வதிவிட உரிமை மூலமாக நீங்கள் சில உரிமைகளையும் கடமைகளையும் பெறுகின்றீர்கள். இந்தக் கையேட்டில் அந்தக் கடமைகள் உரிமைகள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**அகதிகளுக்குரிய தற்காலிக வதிவிட உரிமை இந்த வதிவிட உரிமை மூலம் நீங்கள்:**

* இந்த நாட்டில் வதிய உரிமை உண்டு என்பதைத் தெரிவிக்கலாம்.
* உங்களை அடையாளப்படுத்தலாம் இது ஒரு அடையாளத்தை உறுதிப்படுத்தும் பத்திரமாகும்.

இந்தப் பத்திரம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே செல்லுபடியாகும். உங்களுடைய வதிவிட உரிமைப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியாக எழுதப்பட்டுள்ளதா என பார்க்கவும். உங்களுடைய தகவல்கள் சரியாக இல்லயா? அப்படியாயின் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி இந்தப் பத்திரத்தில் கீழப்பகுதியில் தரப்பட்டுள்ளது.







**அகதிகளுக்கான வதிவிடப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள்**

பின்வரும் தகவல்கள் அந்த அட்டடையின் முன் புறத்தில் தரப்பட்டிருக்கும்.

1 பெயர்: உங்களுடைய கடைசிப்பெயர், முதற்பெயர்
2 முடிவுத்திகதி: இந்த அட்டை இந்தத் திகதிவரை செல்லுபடியாகும்
3 இடமும் தரப்பட்ட திகதியும்: எந்த இடத்தில் வைத்து எந்தத் திகதியில் இந்த அட்டை தரப்பட்டது என்ற விபரம்
4 பத்திர வகை: இலக்கம் III என்பது அதிகாரங்களுக்கான தற்காலிக வதிவிடப் பத்திரம்
5 விசேட அறிவித்தல்: இதில் உங்களின் வதிவிட உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும்

பின்வரும் தகவல்கள அந்த அட்டையின் பின்புறத்தில் தரப் பட்டிருக்கும்:

6 பிறந்த திகதி -இடம், குடியுரிமை,பால்
7 விசேட குறிப்பு: வேலை செய்யலாமா நெதர்லாந்தில் என்பது பற்றியது
8 உரிமை வழங்கப்பட்ட முதற் திகதி: இந்தத் திகதியிலிருந்து நெதர்லாந்தில் வதிய உங்களுக்கு உரிமை உண்டு
9 V-இலக்கம்: உங்களுடைய 10 இலக்கங்கள் அடங்கிய V-இலக்கம் உங்களுடைய வதிவிட அட்டையின் கீழ்ப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. VNR என்ற எழுத்துக்களைத் தொடர்ந்து இந்த இலக்கம் எழுதப்பட்டிருக்கும். IND இலிருந்து உங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களிலும் இந்த V-இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**நீங்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?.**

* நீங்கள் உங்களுக்குரிய வதிவிட உரிமை அட்டையைப் பெற்றுக் கொண்டு அகதிகளுக்கான (W-அட்டை) பத்திரத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும். சில நேரங்களில் வதிவிட உரிமை கிடைத்த பத்திரம் கிடைத்து குறுகிய காலப்பகுதியில் வதிவிட அட்டையும் கிடைக்கும். உங்களுக்கு இன்னும் வதிவிட அட்டை கிடைக்கவில்லையா? சில வாரங்களில் உங்களுக்கு (IND) இலிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்படும். நீங்கள் எந்த IND அலுவலகத்தில் எப்பெழுது இந்த வதிவிட அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த அட்டையைப் பெற்றுக் கொள்ளும் போது நீங்கள் உங்களுடைய W-அட்டையை திருப்பக் கொடுக்க வேண்டும்.

* நீங்கள் உங்களை நகரசபையில் பதிவு செய்ய வேண்டும். நபர்களைப் பதியும் பட்டியலில் (BRP) உங்களைப் பதிவது மிகவும் அவசியம். BRP இல் நெதர்லாந்தில் வசிக்கும் அனைவரது தகவல்களும் பதியப்படும். சில நேரங்களில் உங்களுக்கு வதிவிட உரிமைப் பத்திரம் கிடைத்த உடனேயே நகரசபை பதியும். நீங்கள் உங்களை இன்னும் பதியவில்லையா? நகரசபையுடன் தொடர்பு கொள்ளவும். உங்களுடைய பெயர், பிறந்த திகதி சரியாகக் குறிப்பிடப் பட்டுள்ளதா என சரி பார்த்துக் கொள்ளவும். இயன்றளவு தேவையான பத்திரங்களை எடுத்துச் செல்லவும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை போன்றவை. பதிவின் பின் உங்களுக்கு வதிவு சேவை இலக்கம (BSN) வழங்கப்படும். இது முக்கிய இலக்கமாகும். BRP இல் (BSN) பதிந்த அனைவருக்கும் வழங்கப்படும்.

அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் போது இந்த BSN மிக முக்கியமானதாகும். BRP மற்றும் BSN பற்றிய மேலதிக தகவல்களைப் பெற www.rijksoverheid.nl என்ற இணையத்தளத்தை நாடவும். அல்லது 1400 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். நீங்கள் BRP இல் பதிவு செய்துள்ளீர்களா, வேறு வீட்டுக்கு செல்லப் போகின்றீர்களா? அப்படியாயின் நகரசபைக்கு தெரிவிக்க வேண்டும். நகரசபை உங்களுடைய புதிய விலாசத்தை BRP இல் பதிவு செய்யும்.

* உங்களுடைய வதிவிட உரிமை அட்டையை நீங்கள் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். உங்களுடைய வதிவிடப் பத்திரம் தான் உங்களுடைய அடையாளப்பத்திரமும். நெதர்லாந்தில் 14 வயதிற்கு மேற்பட்டோர் தம்மை அடையளப்படுத்துவது முக்கியம். அதாவது உங்களுடைய வதிவிட அட்டையை நகர்காவலர்ப்பிரிவினருக்குக் காட்டக் கூடியதாக இருக்கவேண்டும். அல்லது காவற்பிரிவினரிற்கு உங்களை அடையாளப் படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்களை அடையாளப் படுத்தத் தவறினால் குற்றப் பணம் கட்ட வேண்டி நேரிடும்.

* மருதுவக் காப்புறுதி செய்ய வேண்டும். சட்டப்படி அடிப்படை மருத்துவக் காப்புறுதி செய்வது அவசியம். இந்தக் காப்புறுதியினூடாக குடும்ப வைத்தியர், வைத்தியசாலை, மருந்தகம் போன்ற செலவுகள் கட்டப்படும். எந்த மருத்துவக் காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்வது என்பதை நீங்களே தெரிவு செய்யலாம். உங்களுக்கு மருத்துவக் காப்புறுதி உள்ளதா? அப்படியாயின் நீங்கள் உங்களை குடும்ப வைத்தியர், மற்றும் பல் வைத்தியர் பிரிவுகளில் பதிவு செய்யலாம். அவசியம் ஏற்படும் பட்சத்தில் குடும்ப வைத்தியர் உங்களை வைத்திய சாலைக்கு சிகிற்சைக்காக அனுப்பலாம்.

மேலதிக தகவல்களுக்கு www.rijjksoverheid.nl என்ற இணையத்தளத்தை நாடவும் அல்லது 1400 தொலை பேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

* இந்த நாட்டு விடையங்களைப் படித்தல். சட்டப்படி நீங்கள் இந்த நாட்டு விடையங்களைப் பற்றி படிக்கவேண்டும். நீங்கள் இந்த நாட்டுச் சமூகம் சம்பந்தமான விடையங்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். உங்களுக்கு இது சம்பந்தமாக கல்விப் பிரிவினால (DUO) கடிதம் ஒன்று அனுப்பி

வைக்கப்படும். உங்களுடைய இந்தப் பாடத் திட்டத்தை அமுல்ப்படுத்துவது உங்களுடைய பொறுப்பு. இதற்கு செலவுகள் ஏற்படும். இந்தப் பரீட்சையில் நீங்கள் சித்தியடைந்தால் நீங்கள் இந்த நாடு சம்பந்தமான அறிவைப் பெற்றுள்ளீர்கள். நீங்கள் இந்த கல்வியை மேற்கொள்ளா விட்டால் DUO இற்கு குற்றப் பணம் கட்ட வேண்டி வரும். நீங்கள் 18 வயதிற்கு உட்பட்டவராக இருந்தாலோ அல்லது ஓய்வு பெறும் வயதை அடைந்தாலோ நீங்கள் இந்தக் கல்வியை மேற்கொள்ளத் தேவையில்லை. மேலதிக விபரங்களுக்கு www.inburgeren.nl என்ற இணையத்தளத்தை நாடவும் அல்லது DUO இன் inburgering பிரிவுடன் பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்: 050 599 9600

**நீங்கள் இப்பெழுது என்ன செய்யவேண்டும்?**

* உங்களுக்குரிய பிரத்தியேகமான அகதிகளுக்கான வதிவிட உரிமை கிடைத்தால், நீங்கள் உங்கள் குடும்பத்தை வரவழைக்கும் விண்ணப்பம் செய்யலாம்(அகதிகளின் குடும்பத்தை அழைத்தல்). நீங்கள் உங்களுடைய நாட்டில் விட்டு வந்த குடும்பத்தை சில நிபந்தனைகளின் அடிப்பயில் இங்கு வரவழைக்கலாம். முக்கிய நிபந்தனைகளுள் ஒன்று இதற்குரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் தொடங்குதல். அதாவது உங்களுக்கு வதிவிட உரிமை கிடைத்ததிலிருந்து மூன்று மாத காலப்பகுதி. உங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் உங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் எங்கு இருக்கிறார்கள் என (இதுவரை) தெரியாமல் இருந்தாலும் இந்தக் காலப்பகுதியினுள் விண்ணப்பம் செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் உங்களின் குடும்ப அங்கத்தவருக்கான தற்காலிக வதிவிட உரிமை உறுதிப்படுத்தல (mvv) விண்ணப்பம் செய்தலுடன் ஆரம்பமாகும். இந்த விண்ணப்பத்தை நீங்கள் இலவசமாக செய்யலாம்.
mvv என்பது ஒரு வகையான குறைந்த பட்சம் 3 மாத காலங்களுக்கான விசா அனுமதியாகும். நீங்கள் இந்த விண்ணப்பத்தை நெதர்லாந்தில் செய்யலாம். இதற்கு நீங்கள் (கணனி மயப்படுத்தப்பட்ட) விண்ணப்பப் படிவம் Aanvraag voor een machtiging tot voorlopig verblijf-nareizigers asiel ஐ பாவிக்கவும். இந்த விண்ணப்பப் படிவத்தை www.ind.nl என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். அகதிகளுக்கான காரியாலயம (VWN) ஊளியர்கள் இந்த விண்ணப்ப விடயத்தில் உங்களுக்கு உதவி புரிவார்கள். உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களும் தாமாக இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம். இதை அவர்கள் தமது நாட்டிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தில் விண்ணப்பிக்கலாம். கவனத்திற்கு! உங்களுக்கு வதிவி உரிமை கிடைத்து 3 மாதங்களுக்கு மேலாகி விட்டதா?. அப்படியாயின் அகதி என்ற அடிப்படையில் உங்களுடைய குடும்பத்தை அழைப்பதற்கான விண்ணப்பம் செய்வதற்குரிய காலக்கெடு முடிவடைந்து விட்டது. ஆனால் சாதாரணமாகக் குடும்பத்தை அழைக்கும் விண்ணப்பம் செய்யலாம். இந்த விண்ணப்பத்திற்குரிய பணம் செலவாகும். அத்துடன் இதற்குரிய நிபந்தனைகள் அகதி என்ற நிலையிலிருந்து குடும்பத்தை வரவழைக்க கேட்கப்படும் நிபந்தனைகளை விட அதிகமானது. உங்களுடைய குடும்பச் செலவுகளை ஈடு செய்யக் கூடியளவு வருமானம் உங்களுக்கு இருக்கவேண்டும் என்பதும் அந்த நிபந்தனைகளில் ஒன்று. இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதர்க்கு பின்வரும் விண்ணப்பப் படிவத்தை நிரப்பவேண்டும். “Aanvraag voor het verblijfsdoel familie en gezin (referent)'' இந்த விண்ணப்பப் படிவத்தை www.ind.nl என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
கவனத்திற்கு! ஏற்கனவே அகதியந்தஸ்து கிடைத்தவரில் தங்கியிருக்கும் வதவிட உரிமை உங்களுக்குத் தரப்பட்டிருந்தால் நீங்கள் ஏனைய குடும்ப அங்கத்தவர்களை வரவழைக்க முடியாது (அகதிகளின் குடும்பத்தை வரவழைத்தல்). நீங்கள் குடும்பத்தை வரவழைக்கும் சாதாரண விண்ணப்பம் செய்யலாம்.

* நீங்கள் வேலை செய்யலாம். உங்களுடைய முதலாளி இதற்காக வேலை அனுமதி (TWA) பெறத்தேவையில்லை. உங்களுடைய வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களிடம் பரத்தியேக வங்கிக் கணக்கிலக்கம் இருக்க வேண்டும். தொழிலாலர் காப்புறுதிப் பணியகம (UWV) இது பற்றிய மேலதிக தகவல்களை உங்களுக்குத் தரும். மேலதிக தகவல்களுக்கு www. uwv.nl /particulieren என்ற இணையத்தளத்தை நாடவும் அல்லது UWV: 0900 9294 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
* நீங்கள் உங்களுக்கு வீடு தேடலாம். அகதிகளைப் பராமரிக்கும் நிறுவனம (COA) வீடு தேடுவதற்கு உதவி புரியும். உங்களுக்கு வீடு கிடைத்தவுடன் COA இன் பராமரிப்பு நிலையத்திலிருந்து புறப்பட வேண்டும்.
நீங்கள் வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்யலாம். உங்களிடம் வதிவிட உரிமை இருப்பதால் வெளிநாடுகளுக்கு உத்தியோக பூர்வமாகவோ அல்லது விடுமுறையாலோ செல்லலாம். உங்களுக்கு ஒரு செல்லுபடியாகக் கூடிய கடவுச்சீட்டு அவசியம். அது  உங்களுடைய பிள்ளைகளுக்கும் அவசியம். உங்களிடம் கடவுச் சீட்டு இல்லாவிடில், அகதிகளுக்கான கடவுச்சீட்டை நகரசபையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
அகதிகளுக்கான கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு செலவுகள் ஏற்படும். அகதிகளுக்கான கடவுச்சீட்டை விண்ணப்பித்த பின் அதைப் பெற்றுக் கொள்வதற்கு சில நாட்கள் ஆகும். சில நாடுகளுக்குப் பிரயாணம் செய்வதற்கு கடவுச்சீட்டுடன் விசா அனுமதியும் தேவை.
கவனத்திற்கு! அகதிகளுக்கான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி உங்களுடைய சொந்த நாட்டிற்குச் செல்ல முடியாது. அகதிகளுக்கான கடவுச்சீட்டைப் பற்றி உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படின் நகரசபையுடன் தொடர்பு கொளளவும். நீணட காலம் வெளிநாட்டில் தங்க விரும்புகிறீர்களா? அப்படியாயின் அதனால் அகதிகளுக்கான வதிவிட உரிமைக்கு ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி IND இடம் கேட்டறிந்து கொள்ளவும். நீங்கள் புறப்படும் திகதி, திரும்பிவரும்
திகதி போன்ற விபரங்களை வெளிநாட்டு நகர்காவலகளிடம் (AVIM) தெரிவிக்க வேண்டுமா என்பது பற்றி IND உங்களுக்கு தெரிவிக்கவும்.

**நீடித்தலை விண்ணப்பித்தல்/அகதிகளுக்கான நிரந்தர வதிவிட உரிமை விண்ணப்பம்.**
உங்களுடைய வதிவிட உரிமைப் பத்திரத்தில் எந்தத் திகதிவரை அந்தப் பத்திரம் செல்லுபடியாகும் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த வதிவிட உரிமைப் பத்திரத்தை உரிய நேரத்தில் நீடிப்பது மிக அவசியம். அதாவது அதன் முடிவுத் திகதி முடியுமுன் நீங்கள் அகதிகளுக்கான நிரந்தர வதிவிடப் பதிதிரத்தையும் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளளாம். உங்களுடைய தற்காலிக வதிவிட உரிமைப் பத்திரத்தின் காலக்கெடு முடியுமுன் நீங்கள் இதனைச் செய்யவேண்டும். தற்காலிக வதிவிட உரிமைப் பத்திரத்தை நீடிக்க விரும்புகிறீர்களா? அல்லது அகதிகளுக்கான நிரந்தர வதிவிடப் பதிதிரத்தை விண்ணப்பிக்க விரும்புகிறீர்களா? இதற்காக நீங்கள் பயன் படுத்த வேண்டிய விண்ணப்படிவம Aanvraag verlenging verblijfs vergunning asiel voor bepaalde tijd  அல்லது  verblijfsvergunning asiel onbepaalde tijd அல்லது EU -verblijfsverrgunning voor langdurig ingezetenen  இந்த விண்ணப்பப் படிவத்தை www.ind.nl என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். இந்த விண்ணப்பத்தை அதிகளவு முன்கூட்டி செய்யவேண்டாம்.
உங்களுடைய வதிவிட உரிமை செல்லுபடியாக இருக்கும் போதே விண்ணபத்தை செய்து கொள்ள வேண்டும். காலக்கெடு முடிவடைய 4 வாரங்கள் இருக்கும் போதே இந்த விண்ணப்பத்தைச் செய்வது விரும்பத்தக்கது. நேரத்திற்கு உங்களுடைய வதிவிட உரிமைப்பத்திரத்தை நீடிப்பதோ அல்லது

நிரந்தர வதிவிடப் பத்திரத்தை விண்ணப்பித்து எடுப்பதோ உங்களுடைய பொறுப்பு.

**நிரந்தரமாக நீங்கள் உங்களுடைய நாட்டிற்கு திருப்பிப் போதல்.**
நீங்கள் உங்களுடைய நாட்டிற்கு நிரந்தரமாகத் திரும்பிப்போக விரும்புகிறீர்களா, அப்படியாயின் நெதர்லாந்து குடியகல்வு நிறுவனத்துடன (NMI) தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு www.nmigratie.nl என்ற இணையத்தளத்தை பார்க்கவும் அல்லது 030 236 42 45 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**இழத்தல், களவு, சிதைவு, அல்லது பிழையான தகவல்கள்**
* உங்களுடைய வதிவிட உரிமைப்பத்திரம் தொலைந்து விட்டதா?
அப்படியாயின் நகர்காவலர்ப்பிரிவில் தொலைந்துவிட்டது அல்லது களவு என முறைப்பாடு செய்ய வேண்டும். முறைப்பாடு செய்வதற்கு உங்களது ஏ- இலக்கம் தேவை. உங்களுக்கு IND இலிருந்து வரும் கடிதங்களில் இந்த இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கும். நகர்காவலர்களடமிருந்து உத்தியோக பூர்வமான குற்றவியல் அறிக்கை உங்களுக்குத் தரப்படும். அதன்பின் IND இல் விண்ணப்பித்து புதிய வதிவிட உரிமைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும். அந்த விண்ணபத்துடன் குற்றவியல் அறிக்கையையும் இணைத்து அனுப்பவும்.
* உங்களுடைய வதிவிட உரிமைப்பத்திரம் சிதைவடைந்து விட்டதா?
உங்களுடைய வதிவிட உரிமைப்பத்திரம் சிதைந்து விட்டதென்றால் அதை நீங்கள் அடையாளப் பத்திரமாகப் பாவிக்கமுடியாது. அப்படியாயின் நீங்கள் IND இல் வேறு ஒரு பத்திரத்தை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த விண்ணபத்துடன் சிதைவடைந்த வதிவிட உரிமைப் பத்திரத்தின் முற்புற, பிற்புறப் பகுதியையும் இணைத்து அனுப்பவும். புதிய பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது பழைய சிதைவடைந்த பத்திரத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும்.
* உங்களுடைய வதிவிட உரிமைப்பத்திரத்தில் பிழையான தகவல்கள் உள்ளனவா? நபர்களுக்கான அடிப்படைப் பதிவேட்டில (BRP) இருந்து IND தகவல்களைப் பெற்றுக்கொள்ளும். எனவே நீங்கள் முதலில் உங்களுமைய நகரசபையுடன் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களுடைய தரவுகள் BRP இல் சரியாக எழுதப்பட்டுள்ளதா என நகரசபை ஆராயும். BRP இல் உங்களுடைய தரவுகள் தவறாக பதியப்பட்டிருந்தால், அத்தகவல்கள் முதலில் மாற்றப்படும். அதன்பின் IND இற்கு சென்று அந்தப்பத்திரத்தை மாற்றித் தருமாறு கேட்கலாம்.
* பத்திரத்தை மாற்றித் தருமாறு IND இற்கு எப்படி விண்ணப்பிக்கலாம்?
அதற்காக நீங்கள் பாவிக்கவேண்டிய விண்ணப்பப் படிவம் 'Aanvraag vervanging of vernieuwing vreemdelingendocument" இதை நீங்கள் www.ind.nl என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். புதிய வதிவிட உரிமைப்பத்திரத்தை விண்ணப்பிப்பதற்கு பணச் செலவு உருவாகும். புதிய பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் போது அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**உங்களுக்கு ஏதாவது கேள்விகள் உள்ளதா?**
IND இன் இணையத்தளத்தை நாடவும், www.ind.nl அல்லது ஐனே இற்குரிய பொதுவான தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு எடுக்கலாம். தொலைபேசி இலக்கம் 088 043 04 30. IND இற்கு பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் போது அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**உங்களுக்கு ஏதாவது கேள்விகள் உள்ளதா?**
IND இன் இணையத்தளத்தை நாடவும், www.ind.nl அல்லது IND இற்குரிய பொதுவான தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு எடுக்கலாம். தொலைபேசி இலக்கம் 088 043 04 30.